# முஸ்லிம்களின் திருமணத்தில் மஹரும், அன்பளிப்பும்: கல்முனைக்குடி பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

# Mahr and Donation in Muslim Marriage: A research based on kalmunaikudy

**Dr. MIM. Jazeel (1) and Ms. MI. Rinosa (2)**

(1)Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.

(2) Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.

(mjazeel@hotmail.com / rinosaismail@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம்**

*இலங்கை முஸ்லிம்களது திருமணத்தில் மஹரும் நன்கொடையும் பிரதானமான கூறுகள் என்பதற்கமைய கிழக்கிலங்கையின் கல்முனை முஸ்லிம்களது திருமணமும் மஹர், நன்கொடை ஆகிய அம்சங்களைக் கொண்டமைந்து காணப்படுகிறது. இஸ்லாமியத் திருமண நியமங்களுக்கேற்ப மஹர் திருமண ஒப்பந்தத்தின் பிரதான விடயங்களில் ஒன்றாகவும் உள்ளது. எனவே கல்முனை முஸ்லிம்களது திருமணத்தில் மஹர், நன்கொடை நடைமுறைகளை விபரித்தலையும் அந்நடைமுறைகளை இஸ்லாமிய நியமங்களோடு ஒப்பிடுதலையும் இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வில் அளவு சார், பண்பு சார் ஆகிய இரு ஆய்வு முறைகளும் பிரயோகிக்கப்பட்டுள்ளன. நேர்காணல், வினாக்கொத்து, அவதானம், கலந்துரையாடல் ஆகிய வழிகளினூடாக பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டது. கல்முனை முஸ்லிம்களின் திருமணம் மஹரையும் ஒரு அடிப்படையாகக் கொண்டிருந்தபோதும் மஹரின் தொகை மிகப் பெரும்பாலும், ஐம்பதுநாயிரத்துக்கும் உட்பட்டதாக அமைந்துள்ளது. மஹர் பணமாக அன்றி தங்கமாகவும் செலுத்தப்படும். மஹர் தொகையை நிர்ணயிக்கும் உரிமை மணப்பெண்ணிடம் இல்லை. மஹரை செலுத்தும் மணமகன் பெண் வீட்டிலிருந்து நன்கொடையைப் பெற்று மஹர் செலுத்துகின்ற நிலையும் காணப்படுகின்றது. எனவே, கல்முனை முஸ்லிம்களது மஹர், நன்கொடை நடைமுறைகள் இஸ்லாத்தின் இலட்சியம், நியமங்களைக் கருத்திற் கொண்டு அமைந்துள்ளது எனக்கூறுவதில் ஏற்பு நிலை இல்லை என்பவை இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகும்.*

**கலைச்சொற்கள்:** *முஸ்லிம் திருமணம், மஹர், நன்கொடை, இஸ்லாம்*

**ஆய்வின் பின்னணி**

இலங்கையில் நன்கு அடையாளப்படுத்தப்பட வேண்டிய நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியத்தை உடைய பெரும்பான்மை முஸ்லிம்களைக் கொண்ட பிரதேசமே கல்முனைக்குடி ஆகும். இலங்கை முஸ்லிம்களிடையே திருமணம் பிரதானமான ஒன்றாக இடம் பெறுகின்றது. இஸ்லாத்தில் திருமணம் ஒரு ஒப்பந்தமாகவே கொள்ளப்படுகின்றது. இவ்வொப்பந்தம் பல அம்சங்களைக் கொண்ட ஒன்றாகும். இவ்வம்சங்கள் கருத்திற் கொள்ளப்படாத போது திருமண ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகி விடுகின்றது. இவ்வம்சங்களில் 'மஹர்' என்பதும் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். எனவேதான் இவ்வாய்வில் கல்முனை முஸ்லிம்களது மஹர் செயற்பாடு பரிசீலனைக்குட்படுத்தப்படுகிறது.
அல்லாஹ் மனிதனை தன்னுடைய பிரதிநிதியாகப் படைத்து மனித இயல்புக்குப் பொருத்தமான வழிகாட்டலை வழங்கியுள்ளான். அந்த வழிகாட்டலில் ஒன்றே திருமணமாகும். இஸ்லாத்தில் திருமணம் நிகாஹ் எனப்படுகிறது. "'*நிகாஹ்*' என்பது விரிந்த பொருளைக் கொண்ட பதமாகும். இது நிறுவப்பட்ட ஒரு சமயக் கட்டளை எனவும் மனைவியுடன் உறவு கொள்ளுவதற்கான ஒப்பந்தம் என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது." **(Mohamed shakir Ali. 2010. p:12)** திருமணத்தை இஸ்லாம் பாலியல் தேவைக்காகவும் சந்ததி விருத்திக்காகவும் மட்டும் அனுமதிக்காது '*இபாதத்*' ஆக அறிமுகம் செய்து அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. திருமணமும் ஒருவகை இறை வணக்கம் ஆகும். திருமணத்தின்போது இறைவனின் கட்டளையை நிறைவேற்றுகின்றோம் என்ற எண்ணம் இருக்க வேண்டும். இதனால் தான் இறைவனின் அன்பும், அருளும் கிடைக்கும்.

இஸ்லாமியத் திருமண ஒப்பந்தம் '*அக்துன் நிகாஹ்*' எனப்படுகின்றது. '*நிகாஹ்*' நிறைவேறுவதற்கு சில விடயங்கள் முழுமையாகக் கடைப்பிடிக்கப் பட வேண்டும். இவற்றுள் ஒன்று சிதறினாலும் '*நிகாஹ்*' ஒப்பந்தம் நிறைவேறாது. இப்படித் தவற விடுவது தம்பதியரை விபச்சாரத்திலும் சேர்த்து விடும்.

**(அப்துல் லத்தீப். 2009. பக்: 3)** அவையாவன, மணமகன், மணமகள், பெண்ணின் பொறுப்பாளர் (*வலி*), சாட்சிகள் (*ஷாஹித்*), ஒப்புவித்தலும், ஏற்றுக்கொள்ளலும் (*ஈஜாப் - கபூல்*) என்பவற்றுடன் மஹர் வழங்குதலும் ஆகும்.

*'மஹர்'* ஒரு கௌரவப் பரிசுப் பொருள், மணக் கொடை என்றெல்லாம் வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. **(அப்துல் லத்தீப். 2009. பக்: 13)** எனினும் மனைவி விவாகரத்து கோரும்போது மஹர்த் தொகையும் திருப்பியளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை காணப்படுவதனால் அதனை மணக் கொடை என்றோ பரிசுப் பொருள் என்றோ குறிப்பிடுவது பொருத்தமற்றதாகி விடுகிறது. ஏனெனில் பரிசுப் பொருள் திருப்பியளிக்கப்படுவதில்லை. மேலும் பரிசுப் பொருள் விரும்பிளிக்கப்படுவதாகும் அதை வழங்குவதும் வழங்காதிருப்பதும் கொடுப்பவர் விருப்பம். ஆனால் மஹர் அவ்வாறல்ல அது பெண் கேட்டுப் பெற வேண்டிய உரிமையாகும். மணவாளன் அதனைக் கொடுப்பது அவன் மீது கடமையாகும்.

"***அல்லாஹ் கட்டளை இடுகின்றான், "அவர்களுக்குக் குறிப்பிட மஹரை அவர்களிடம் (குறைவின்றிக் கண்டிப்பாக) நீங்கள் கொடுத்து விடுங்கள். (நம்பிக்கை கொண்ட அடிமைப் பெண்களையும்) அவர்களுடைய எஜமானின் அனுமதியைப் பெற்று சட்டப்படி அவர்களுக்குரிய மஹரையும், கொடுத்தே நீங்கள் அவர்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்."*** **(அல்குர்ஆன்: 4: 24,25)**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எந்த நிபந்தனையின் வாயிலாக உரிமையாளர்களாக ஆகிறீர்களோ அதுவே மற்றெல்லா நிபந்தனைகளை விட முன்னதாக நிறைவேற்றிட உரிமை பெற்ற நிபந்தனையாகும்." **(நூல்: புகாரி, முஸ்லிம்)**

எனவே திருமணத்தின் பின் கணவனால் விவாகரத்து பெறப்படும் போது அவள் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கானதொரு பாதுகாப்பு நிதி என்று கூறலாம். ஏனெனில் திருமணத்தின் பின்னர் பெண்ணே அதிக இழப்புக்களுக்கு முகம் கொடுக்கிறாள். இந்தரீதியில் மஹர் என்பது கட்டாயம் திருமணத்தில் இடம்பெற வேண்டியதொரு அம்சம் எனக்கொள்ளலாம். இது எல்லா முஸ்லிம்களுக்கும் விதிக்கப்பட்ட கடமையாகும். நன்கொடை எனப்படுவது மணமக்களது புது வாழ்வுக்காக பெற்றோரால் வழங்கப்படும் அன்பளிப்பாகும். இதனை வழங்குவது அவரவர் விருப்பத்துக்கமைய இடம் பெறுகிறது.

ஆய்வுப் பிரதேசத்தைப் பொருத்தவரை முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சிகளின் தாக்கம் காரணமாக தற்கால முஸ்லிம்களது திருமணத்தில் மஹர், நன்கொடை போன்ற விடயங்களில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் அந்நிய கலாச்சார தாக்கங்கள், பழமை போற்றும் சிந்தனை, பிறருக்கு காண்பிக்க வேண்டும் என்ற எண்ணம், இஸ்லாம் பற்றிய தெளிவின்மை என்பவற்றால் இஸ்லாத்தில் அனுமதிக்காத பல விடயங்கள் இன்றளவும் இடம்பெறுகின்ற நிலை காணப்படுகின்றது. இந்த வகையில் ஆய்வுப்பிரதேசத்தில் திருமணம் தொடர்பான ஆய்வுகள் இடம் பெற்ற போதும் கல்முனைக் குடி 1 தொடக்கம் 14 வரையிலான கிராம சேவகர் பிரிவை மையமாக வைத்து தற்காலத்தில் மஹர், நன்கொடை பற்றி தனியாக ஆய்வுகள் இதுவரை இடம் பெறவில்லை என்பதுடன், ஆய்வுப் பிரதேசத்தில் நடைமுறையிலுள்ள மஹர், நன்கொடை முறைகள் பற்றிய இஸ்லாமிய கருத்து நிலையை முன்வைத்து மஹர் விடயத்தில் இஸ்லாமிய விழுமியங்கள் பேணப்படுவதற்கான சில ஆலோசனைகளை முன்வைப்பதும் இவ்வாய்வுக்கான பின்னணி ஆகும்

**ஆய்வின் நோக்கம்**

- ✓ கல்முனை முஸ்லிம்களது திருமணத்தில் மஹர், நன்கொடை நடைமுறைகளை விளக்குதல்
- ✓ ஆய்வுப்பிரதேசத்தில் இடம் பெறும் மஹர், நன்கொடை நடைமுறைகளை இஸ்லாமிய கணனோட்டத்தில் நோக்குதல்.

**ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்**

கல்முனைக்குடி 1 தொடக்கம் 14 வரையான கிராம சேவகர் பிரிவில் வாழும் முஸ்லிம்களில் கடந்த 2 வருடத்துக்குள் திருமணம் செய்தவர்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாய்வுக்கு 2012, 2013 ஆம் ஆண்டுகளில் திருமணம் செய்த ஆண்களிலும் பெண்களிலும் சம விகிதத்தில் 94 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 5 : 1 திருமணம் என்ற விகிதத்தில் வழங்கப்பட்ட வினாக்கொத்து மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் கணனி மென்பொருட்களான SPSS மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு MS Excel மூலம் வரைபுகள் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை: 01 இடம் பெற்ற திருமணங்களும் தகவல் தருனர் பெறுமானங்களும்**

| கிராம சேவகர் பிரிவு | 2012,2013இல் இடம் பெற்ற திருமணம் | இரு ஆண்டின் மொத்தம் | இரு ஆண்டுத் திருமணங்களின் வீதம் | 2012,2013 இல் தகவல் தருனர் எண்ணிக்கை | தகவல் தருனரின் எண்ணிக்கை | தகவல் தருனர் வீதம் |
|---|---|---|---|---|---|---|
| கல்முனைக்குடி 01 | 15+20 | 35 | 7.32% | 3+4 | 7 | 7.45% |
| கல்முனைக்குடி 02 | 14+18 | 32 | 6. 69% | 3+3 | 6 | 6.38% |
| கல்முனைக்குடி 03 | 10 + 13 | 23 | 4.81% | 2+2 | 4 | 4.26% |
| கல்முனைக்குடி 04 | 15+16 | 31 | 6.49% | 3+3 | 6 | 6.38% |
| கல்முனைக்குடி 05 | 22 + 20 | 42 | 9% | 4+4 | 8 | 8.51% |
| கல்முனைக்குடி 06 | 14+18 | 32 | 6.69% | 2+4 | 6 | 6.38% |
| கல்முனைக்குடி 07 | 20 + 19 | 39 | 8.16% | 4+4 | 8 | 8.51% |
| கல்முனைக்குடி 08 | 19 +18 | 37 | 7.74% | 4+4 | 8 | 8.51% |
| கல்முனைக்குடி 09 | 26+30 | 56 | 11.72% | 5+6 | 11 | 11.70% |
| கல்முனைக்குடி 10 | 16 + 20 | 36 | 7.53% | 3+4 | 7 | 7.45% |
| கல்முனைக்குடி 11 | 17+16 | 33 | 6.90% | 3+3 | 6 | 6.38% |
| கல்முனைக்குடி 12 | 14+11 | 25 | 5.23% | 3+2 | 5 | 5.32% |
| கல்முனைக்குடி 13 | 12+19 | 31 | 6.49% | 2+4 | 6 | 6.38% |
| கல்முனைக்குடி 14 | 16+17 | 33 | 6.60% | 3+3 | 6 | 6.38% |
| **மொத்தம்** | 230+255 | **478** | **100%** | 44+50 | **94** | **100%** |

மூலம்: விவாகப் பதிவு அறிக்கைகள் 2012, 2013

இப்பகுதியில் பெண்களின் தொகையே அதிகமாகக் காணப்படினும் கடந்த இரு வருடங்களில் திருமணம் செய்தவர்கள் ஒன்றில் ஆண் அல்லது பெண் என்றவகையில் அவர்களுக்கு சமபிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மஹர் என்பது பெண்ணின் உரிமையாகவும் ஆணின் கடமையாகவும் காணப்படுவதால் பக்கச்சார்பான தகவல்களை தவிர்க்கவும் சமபிரதிநிதித்துவம் அவசியமாகும். இவற்றுடன் நேரடி அவதானம் ஆய்வுப் பிரதேசத்தின் முக்கிய பிரமுகர்கள், ஆய்வுப் பிரதேச மக்களுடனான நேர்காணல், போன்ற முதலாம் நிலைத்தரவுகள் மூலமும் நூல்கள், இணையத்தள ஆக்கங்கள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகள் மூலமும் தகவல்கள் பெறப்பட்டன.

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**


**மஹர், நன்கொடை வித்தியாசங்கள்**

இஸ்லாம் மஹரை மிக அழுத்தமாக வலியுறுத்துகின்றது. *'மஹர்'* என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் அவளை திருமணம் செய்யப்போகும் ஆண் கட்டாயம் கொடுக்கவேண்டிய கடமையாகும். *'மஹர்'* என்பது மனைவி தன் கணவனிடம் தன்னை ஒப்படைப்பதற்குப் பகரமாக அவரிடம் இருந்து பெறுகின்ற ஈட்டுத் தொகையாகும். விவாகத்தின்போது, *'மஹர்'* கொடுப்பது *'வாஜிப்'* ஆகும். அதனை அவ்வேளை பிரஸ்தாபிப்பது *'சுன்னத்'* ஆகும். **(அப்துல் லதீப். 2009. பக் : 13)**

"***மஹரை மணமுவந்து கொடுக்க வேண்டும்"*** (அல்குர்ஆன் 4 : 4) "***மஹர் கொடுக்கப்பட்ட பெண்கள் ஹலால் -சட்ட ஒழுங்கின்படி நுகர அனுமதிக்கப்பட்டவள்***" (அல்குர்ஆன் : 33 : 50)

இந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்தில் மஹர் குறிக்கப்படாது எந்தத் திருமணமும் இடம் பெறவில்லை என அறியப்பட்டுள்ளது. எனினும் இங்கு மஹருடன் இணைந்ததாக பெண்ணின் பெற்றோரின் நன்கொடைக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. 81 (86.17%) திருமணங்களில் மஹருடன் பெற்றோரால் நன்கொடை அளிக்கப்பட்டதாக அறிய முடிகிறது. நன்கொடை எதுவுமின்றி, மஹர் மட்டும் இடம் பெற்ற திருமணங்கள் 13 (13.83%) ஆகும்.

**வரைபடம் : 01 திருமணத்தின் மஹர், நன்கொடை விபரம்**




மூலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

மஹர் எல்லோராலும் ஏதோவொரு அமைப்பில் இடம்பெறும்போதும் நன்கொடைகள் ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்தவரை பெரும்பாலும் கேட்டே பெறப்படுகின்றன ஆயினும் இதனை வெளியிடுவதனையோ சீதனம், கைக்கூலி எனக்

கூறப்படுவதனையோ அவர்கள் விரும்பவில்லை. மஹரை குறைவாக வழங்கிவிட்டு பெண்களிடம் வரதட்சனை பெரும் வழக்கமும் வாங்கிய கைக்கூலியில் இருந்து ஒரு சிறு தொகையை மஹராக வழங்கும் வழக்கம் காணப்படுகின்றது இது கைக்கூலி என்ற பிரிவில் ஒப்பந்தப் பதிவில் எழுதப்பட்டும் விடுகின்றது வேறு சில இடங்களில் பெண் வீட்டாரிடம் நன்கொடை என்ற பெயரில் பெறப்படுகின்றது. நன்கொடை என்பது அன்பளிப்பு ஆகும் திருமணத்தின்போது பெற்றோரிடமிருந்து கேட்டுப் பெறாமல் விரும்பி அளிக்கப்படும் போது அதனை நன்கொடைக்குள் உள்ளடக்கலாம். ஆனால் அதுவே கேட்டுப் பெறப்படும்போது அவை சீதனம் அல்லது கைக்கூலியாக ஆகிவிடுகின்றது மேலும் நன்கொடையும் மற்றவர்களது உணர்வுகளை மதித்து பெருமூச்சு விடுமளவுக்கு இருப்பது உகந்ததல்ல. **(நேர்காணல்:03)**

பாத்திமா (ரழி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் ஓலையினால் பின்னப்பட்ட ஒரு கட்டில், பேரிச்சம் ஓலையினால் நிரப்பபட்ட தோல் துண்டு ஒன்று, தண்ணீர் இறைக்கும் தோல்பட்டை ஒன்று, மன்னினால் செய்யப்பட்ட குடங்கள் இரண்டு, தண்ணீர் பை ஒன்று, மாவரைக்கும் கல் இயந்திரம் இரண்டு, இவைதான் அவருக்கு வழங்கப்பட்ட நன்கொடைகள் **(ஸஹிஹ் புஹாரி)** இதனை வைத்து அன்பளிப்புக்கள் எவ்வளவாயினும் வழங்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். இந்த ஹதீஸின் பிரகாரம் நன்கொடை அலி (ரழி) அவர்களால் கேட்டுப் பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்காலத்தில் வழங்கப்பட்டுவரும் நன்கொடைகளுக்கும் நபி (ஸல்) அவர்களது நன்கொடைக்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றது. (**Asiff Hussain. 2007. P: 123**)

மஹரை குறைவாக வழங்கிவிட்டு பெண்களிடம் வரதட்சனை பெரும் வழக்கமும் வாங்கிய கைக்கூலியில் இருந்து ஒரு சிறு தொகையை மஹராக வழங்கும் வழக்கம் காணப்படுகின்றது இது கைக்கூலி என்ற பிரிவில் ஒப்பந்தப் பதிவில் எழுதப்பட்டும் விடுகின்றது வேறு சில இடங்களில் பெண் வீட்டாரிடம் நன்கொடை என்ற பெயரில் பெறப்படுகின்றது. நன்கொடை என்பது அன்பளிப்பு ஆகும் திருமணத்தின் போது பெற்றோரிடமிருந்து கேட்டுப் பெறாமல் விரும்பி அளிக்கப்படும்போது அதனை நன்கொடைக்குள் உள்ளடக்கலாம். ஆனால் அதுவே கேட்டுப் பெறப்படும்போது அவை நன்கொடை அல்ல கைக்கூலியாக ஆகிவிடுகின்றது மேலும் நன்கொடையும் மற்றவர்களது உணர்வுகளை மதித்து பெருமூச்சு விடுமளவுக்கு இருப்பது உகந்ததல்ல. **(நேர்காணல்:03)**

பாத்திமா (ரழி) அவர்களுக்கு நன்கொடை வழங்கப்பட்டதை வைத்து சீதனம் வழங்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். இங்கு அது அலி (ரழி) அவர்களினால் கேட்டுப் பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இது சீதனம் என்ற பெயரில் அமையாததுடன் தற்காலத்தில் வழங்கப்பட்டுவரும் நன்கொடைகளுக்கும் நபி (ஸல்) அவர்களது நன்கொடைக்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இஸ்லாத்தின் நடைமுறையில் மணமகன் மணப் பெண்ணுக்கு மஹர் கொடுத்து மணம் செய்ய சொல்கிறதே தவிர சீதனம் பெற்று மணம் செய் என்று கூறவில்லை முஸ்லிம்களது விவாகத்தில் அந்நிய கலாசாரத்தில் இருந்து புகுந்து கொண்ட ஒரு நடைமுறை என எல்லோராலும் விமர்சனம் செய்யப்படுகின்றது. மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் இருந்து சீதனம் பெற்றுக் கொள்ளும் நடைமுறை ஷரிஅத்தில் அறவேயில்லை. இது வந்து புகுந்த மிக மோசமான அந்நிய கலாசாரத் தாக்கமாகும். இதில் கொள்கைவாதிகள் உடன்பட்ட கருத்தைக் கொண்டுள்ளனர். **(நேர்காணல்:04)**

"***அன்றி நீங்கள் உங்களுக்கிடையில் ஒருவர் மற்றொருவரின் பொருட்களை தவறான முறையில் உண்ணாதீர்கள்.....***" (அல்குர்ஆன்: 2: 188)
***"விசுவாசிகளே! நீங்கள் உங்களுக்குள் சம்மதத்தின் பேரில் நடைபெறும் வியாபாரத்தின் மூலமாகவன்றி உங்களில் ஒருவர் மற்றவரின் பொருட்களை தவறான முறையில் விழுங்க வேண்டாம்***" (அல்குர்ஆன்: 4: 29)


எனவே தகாத அல்லது ஆகாத வழிகள் என்பது வட்டி, சூது, களவு, அபகரித்தல், இலஞ்சம் ஆகியவற்றோடு மாப்பிள்ளை பெறும் சீதனத்தை குறிப்பிடுகின்றனர். ஏனெனில் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு கொடுக்கும் சீதனம் ஷரிஆவை மீறியதாகும். அத்துடன் அவர்கள் மனவிருப்பத்துடன் அதைக் கொடுப்பதுமில்லை. அல்லாஹ்வும் ஒரு சகோதரனின் செல்வத்தை இன்னொரு சகோதரன் அநீதமாக உண்ணுவதனை விரும்பவில்லை.

**மஹரின் அளவு**

இஸ்லாம் ஒரு பெண்ணைக் கண்ணியப் படுத்துவதற்காக மஹர் எவ்வளவும் கொடுக்கலாம் என்கிறது. அது ஒரு தங்கப் புதையலாகவும் இருக்கலாம் என்பது குர்ஆனின் கருத்தாகும். ஆயினும் அது மஹரின் அதிகபட்ச அளவை நிர்ணயிக்கவில்லை.

"***பொற்குவியலையே மஹராகக் கொடுத்திருந்தாலும் அதிலிருந்து எதனையும் திரும்பி எடுத்துக் கொள்ளாதீர்கள்***" **(அல்குர்ஆன் : 4 : 20, 21)**

**வரைபடம் : 02 வழங்கப்படும் மஹர் தொகை தொடர்பான விபரம்**





மூலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

வழங்கப்படும் மஹர் குறைவாகவும் பெறப்படும் நன்கொடை கூடுதலாகவும் காணப்படுகின்றது. மஹர் வழங்கப்படும் அளவை பொருத்தவரை 43 திருமணங்களில் (45.74%) 10,001 ரூபாய் தொடக்கம் 50,000 வரை இடம் பெற்றுள்ளது. இதுவே மிக அதிகமான திருமணங்களில் இடம் பெற்ற மஹர் தொகையாக உள்ளது. 5001 ரூபாய் தொடக்கம் 10,000 வரையான மஹர் தொகை இடம் பெற்ற திருமணங்கள் (20.21%) இதற்கு அடுத்த இடத்தில் உளளன. மிகக் குறைவாக (5.32%) இடம் பெற்றுள்ள மஹர் தொகை 1000 - 5000 ஆக உள்ளது. இதனை பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

மஹர் தொகைகள் ஆய்வுப் பிரதேசத்தில் 1 ரூபாயுடன் முடியும் தொகையாக தொன்று தொட்டு குறிக்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் மஹர் தொகையானது 1 ரூபாயுடன் முடியும் திருமணங்கள் 72.34% ஆக காணப்படுகின்றது. அதாவது உதாரணமாக, 1001 ரூபாய், 5001 ரூபாய் 10,001 ரூபாய் என அமைவதாகும். இத்தொகையில் குறைந்தளவிலான மஹர் தொகையே அதிகமாக ஒரு ரூபாயில் முடிகின்றது. தங்க நகைகள் மஹராக வழங்கப்படும் போதும் கூடுதலான மஹர் தொகை வழங்கப்படும் போதும் இது பெரும்பாலும் இடம் பெறுவதில்லை. இதனை பின்வரும் வரைபடம் குறித்து நிற்கிறது. வரைபடத்தில் குறைவான வழங்கப்படும் மஹர் தொகையே ஒரு ரூபாயில் முடிவதைக் காணலாம்.

**வரைபடம்: 03 ஒரு ரூபாயுடன் முடியும் மஹர் பற்றிய விபரம்**




மூலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

சில இடங்களில் மஹர் காலம் காலமாக ஒரே குறைந்த தொகை வழங்கப்படுகின்றது. மேலும் இது ஒரு ரூபாயில் முடிவதாக அமைகின்றது. இந்நடைமுறை பற்றி அறிஞர்கள் இரு வேறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளனர் முதலாவது பிரிவினர் அதை ஆமோதிப்போராவர். இதற்கும் அவர்கள் அல்லாஹ் ஒருவன் அவன் ஒற்றைப்பட உள்ள கருமங்களை விரும்புகின்றான் என்ற ஹதீஸை ஆதாரமாகக் கொண்டுள்ளனர். மற்றுமொருசாரார் இதை மஹர் விடயத்தில் பொருந்திப் பார்ப்பது பொருத்தமற்றது எனவும் அவை அந்நியர்களிடமிருந்து வந்த வழக்காக உள்ளது, உதாரணமாக தமிழர்கள் பணப்பரிமாற்றம் செய்யும் போது ஒற்றை எண் அடிப்படையில் வழங்குகின்றனர் இதிலிருந்து இவ்வழக்கு வந்திருக்கலாம் என்று கூறுகின்றனர். மேலும் ஒற்றை எண் 1 மாத்திரமல்ல அது 3 இல் முடியலாம் 7 இல் முடியலாம் 9 இலும் அமையலாம் இவ்வாறு ஒற்றை எண் அடிப்படையில் மஹர் கொடுக்க வேண்டும் என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹபீபா (ரழி) வுக்கு கொடுத்த தொகை 400 திர்ஹமாக இருந்தது இது எந்த ஒற்றை எண்ணிலும் இடம் பெறவில்லை என்றும் குறிப்பிடுகின்றனர். மஹர் தொகைக்கு இத்தகைய உச்ச வரம்பு இல்லை என்பதை அல்குர்ஆனும் நிருவுகிறது. **(நேர்காணல்:02)**

எனினும் குறைந்த மஹர் இஸ்லாத்தில் சிறப்புக்குறியதாகக் கொள்ளப்படுகிறது. நபி (ஸல்) அவர்களின் பொன்மொழி ஒன்று இவ்வாறு கூறுகின்றது, "பரகத்துக்குரிய மகத்தான பெண்ணொருத்தி மிகக் குறைந்த மஹரை உடையவளாவாள்" **(அறிவிப்பவர் ஆயிஷா (ரழி), நூல் :ஹாகிம், அஹ்மத்)**

"ஒருவர் இறைத் தூதுவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'நான் அன்ஸாரிகளில் ஒரு பெண்ணை மணந்து கொண்டேன் என்று கூறினார், 'மஹர் எவ்வளவு கொடுத்தாய்?' என்று கேட்டார்கள். 'நான்கு ஊகியாக்கள்' என்று பதிலளித்தார்" (ஒரு ஊகியா என்பது 40 திர்ஹமாகும்.) இந்த மஹரைச் செலுத்த இவருக்கு உதவி தேவைப்பட்டதையும், அவருடைய பொருளாதார நிலையையும் குறிப்பிட்டு இறைத் தூதுவர் நபி (ஸல்) அவர்கள் கோபமாகக் கேட்டார்கள், 4 ஊகியாவா? இந்த மலையின் ஒரு புறத்திலிருந்து நீ வெள்ளியைத் தோண்டி எடுப்பதைப் போல் தெரிகின்றதே! ஏன்றார்கள் **(அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி), நூல்கள் : முஸ்லிம், நஸஈ)**

"கணவன் எவ்வளவு தர முடியுமோ அதைவிட அதிகமான மஹரைக் கேட்பது தடுக்கப்பட்டதாகும். அதிகமான மஹரைக் கேட்பது முஸ்லிம் மத்தியில் நிலையான பழக்கமாக மாறிவிட்டால் ஆண்களில் சிலர் தன் மனைவியரின் ஆணையை நிறைவேற்ற திருட்டு, இலஞ்சம், சூதாட்டம் மற்றும் தடுக்கப்பட்ட செயல்களில் ஈடுபட நேரிடும். இறுதியில் இது சமுதாய அழிவிற்கு

காரணமாகிவிடும்.'' எனவும் ஒரு கருத்து கூறப்படுகிறது. **(முஹம்மது இப்னு முஸ்தபா. 2010. பக்: 108)** இதற்கு பின்வரும் ஹதீஸை ஆதாரமாகக் கொள்கின்றனர்.

"நிச்சயமாக இஸ்ராயீலின் சந்ததிகள் அழிய முதற் காரணம் அவர்களுள் ஏழையின் மனைவி, பணக்காரனின் மனைவி கேட்கின்ற ஆடைகள் மற்றும் நகைகளைப் போன்று தன் கணவனிடம் கேட்டதுதான்.'' **(அறிவிப்பவர் : அபூஸயீத் (ரழி), நூல் : இப்னு ஹுஸைமா, அஹ்மத்)**

இந்த வகையில் மஹர் இரு சாராருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அமைவது அவசியமாகும். மஹருக்கான உச்ச வரம்பை இடுவதில் இஸ்லாமிய அறிஞர்களுக்கிடையில் வேறுபாடு காணப்படுகின்றது.

"இமாம் ஹனபி மத்ஹபினர் மஹரின் அளவு 10 *'திர்ஹம்'* என்றும் மாலிகி மத்ஹபினர் 3 திர்ஹம்களும் என கொள்ளப் படுகின்றது. ஷாபிஈ மத்ஹபினர் மஹருக்கான எல்லையை இடவில்லை. நபி மகள் பாத்திமா (ரழி) யின் மஹர் 500 திர்ஹம்களாக இருந்தது. 1 திர்ஹம் 2.97 வெள்ளி நாணயமாக கொள்ளப் படுகின்றது. எனினும் இது தான் மஹர் தொகை என முடிவெடுத்து விடக்கூடாது. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அல்குர்ஆன் வசனத்துடனும் திருமணம் செய்து வைத்துள்ளார்கள். வசதி குறைந்தவருக்கு சில சமயம் இது பாரதூரமாக அமைந்து விடலாம். இது பெண்ணுக்கு மரியாதை அளிப்பதற்கான சட்டமே ஆகும்.'' **(Ankita Sharma, 2013.02.07)** "மஹர் கொடுப்பது கணவன் மீது கட்டாயமாக இருப்பினும் திருமண ஒப்பந்தம் செல்லுபடியாக அது நிபந்தனை என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. மஹரைக் குறிப்பிடாமலே திருமண ஒப்பந்தம் நடைபெறுவது கூடும். இருப்பினும் இது எதிர்காலத்தில் பிரச்சினைகளுக்கு வழி வகுக்கலாம் என்பதற்காக இவ்வாறு செய்வதைத் தவிர்க்க வேண்டும்.'' என கூறப்படுகின்றது. **(முஹம்மது இப்னு முஸ்தபா. 2010. பக்: 98)**

எனவே மஹர் என்பது கணவனின் பொருளாதாரத் திறனுக்கேற்ப இருக்க வேண்டும். மேலும் மணப் பெண்ணின் சமூக மதிப்பிற்கேற்ப நியாயமானதாக இருக்க வேண்டும். இது பொதுவாக கணவன், மனைவிக்கிடையே ஏற்படுகின்ற ஒரு உடன்பாட்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதுடன் மஹர் வழங்கும் அளவு இரு சாராரையும் பாதிப்பதாக அமையக் கூடாது. ஆய்வுப் பிரதேசத்தைப் பொருத்தவரை மஹர் குறைவாகவே வழங்கப்பட்டு வருவது நோக்கத்தக்கதாகும்.

மஹர் மட்டும் இடம்பெற்ற 13 திருமணங்களில் 40 வீதமான திருமணத்தில் 1000 – 5000 ரூபா வரையிலும் 53 வீதமான திருமணத்தில் 5001 – 10000 வரையிலும் 2 வீதமான திருமணத்தில் 10001 – 50000 வரையிலும் இடம் பெற்றுள்ளது. 50000 க்கு மேல் இங்கு மஹர் வழங்கப்படவில்லை. ஆனால் நன்கொடை அளிக்கப்பட்ட 81 திருமணங்களில் பின்வரும் விகிதாசாரங்களுக்கேற்ப மஹர் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை : 02 நன்கொடை அளித்த, அளிக்காதவர்களின் மஹர் வீதங்கள்**


| மஹர் தொகை | இடம்பெற்ற திருமணங்களின் எண்ணிக்கை | நன்கொடை பெறாது மஹர் அளித்தோர் வீதம் | நன்கொடை பெற்றவர்களின் மஹர் வீதம் |
|---|---|---|---|
| 1000-5000 | 5 | 40% | 2.47% |
| 5001-10,000 | 19 | 52.63% | 13.58% |
| 10,001-50,000 | 43 | 2.33% | 53.09% |
| 50,001-100,000 | 14 | 0% | 14.81% |
| 100000, அதற்கு மேல் | 13 | 0% | 16.05% |

மூலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

இங்கு நன்கொடை பெற்றவர்களில் 10000 இற்கு குறைவான மஹர் 16 வீதமான திருமணங்களிலேயே இடம் பெற்றுள்ளது. மீதம் 84 வீதமானோர் இதற்கு அதிகமாகவே வழங்குகின்றனர். இங்கு நன்கொடை பெற்றபவர்களே மஹரை கூடுதலாக வழங்கியுள்ளமை நோக்கத்தக்கது. இந்த நிலையில் நன்கொடை ஏதும் பெறாமல் மஹரை குறைவாக வழங்குவதானது நன்கொடை அதிகம் பெற்று அதிக மஹர் அளித்தலை விட சிறப்பாக உள்ளது.

தொழில் அடிப்படையில் நன்கொடை பெற்றவர்களை பின்வரும் வரைபடம் தெளிவுபடுத்துகிறது. இதில் அரச உத்தியோகத்தர்களும், தனியார் உத்தியோகத்தர்களும் அதிகமான நன்கொடை பெற்றுள்ளனர். நன்கொடையை நோக்கின் தகவல் வழங்கிய அரச உத்தியோகத்தர் அனைவரும் நன்கொடை பெற்றுள்ளனர். தனியார் உத்தியோகத்தரில் 92% உம் வெளிநாட்டில் பணிபுரிவோரில் 91.43% உம் வியாபாரம் செய்வோரில் 81.82% உம் கைத்தொழில் செய்வோரில் 62.50% உம் நன்கொடை பெறப்பட்டுள்ளது. ஆக பிரதேசத்தில் நன்கொடை வழங்கல் இன்றியமையாத அம்சமாகக் காணப்படுவதை அறியக் கூடியதாக உள்ளது.

**வபைரபடம் : 04 தொழில் அடிப்படையில் நன்கொடை இடம்பெற்ற திருமணங்கள்**




மூலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

கல்வித்தகைமை அடிப்படையில் தொழிற்தகைமைக் கல்வி பெற்றோர், பல்கலைக்கழகம் சென்றோர் 100 வீதமாகக் காணப்படுகின்றனர். இந்தவகையில் பாமரர்களைவிட கல்வி கற்றோர் நன்கொடை அதிகம் பெருகின்றனர் என அறியலாம்.

**வரைபடம் : 05 கல்வித்தகைமை அடிப்படையில் நன்கொடை இடம் பெற்ற திருமணங்களின் வீதம்**




மூலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

**மஹரின் வகைகள்**

ஆய்வுப் பிரதேசத்தில் வழங்கப்படும் மஹர் வகைகள் பெரும்பாலும் பணமாக உள்ளது. அந்த வகையில் 80.85% மான திருமணங்களில் மஹர் பணமாக இடம் பெற்றுள்ளதுடன் குறைந்தளவில் தங்கமும் (19.15%) மஹராக இடம் பெற்றுள்ளது. மஹர் பணமாக மட்டும் இருக்க வேண்டும் என்பதுமில்லை. "தங்கமானது தாலியை மஹராக அளித்தல் தற்காலத்தில் புதிய நடைமுறையாக பின்பற்றப்பட்டு வருகிறது. இது சவடி, நெக்லஷ் போன்ற வடிவங்களில் இடம் பெறுகிறது." **(Asiff Hussain. 2007. P : 122)** தாலியை மஹராக வழங்கலாம் என்பதை சில கொள்கைவாதிகள் ஏற்றுக் கொண்டுள்ளதோடு அதற்கு நியாயம் குறிப்பிடும் போது, தாலி தங்கம் என்பதால் அது பணத்துடன் ஒப்பிடும் போது பெறுமதி வாய்ந்ததாக கொள்ளப்படுகின்றது. இதனால் அதனை மஹராக வழங்கலாம் என்ற கருத்து காணப்பட மற்ற சாரார் தாலி என்பது இந்து கலாசாரதத்திலிருந்து வந்த முறையாகும், இது அந்நிய கலாசார அம்சம் என்ற வகையில் இதனை மஹராக அளிப்பதும் உகந்ததல்ல என்கின்றனர்.


"தாலி என்பது இந்துக்களது கலாச்சாரமாகும் ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வருவதற்கு முன்பாக தாலிகட்டும் வழக்கம் தமிழர்களிடம் இருந்து வந்திருப்பதாக பண்டைய தமிழ் நூல்களில் காணலாம். திருமண வைபவத்தில் மணமகனைச் சேர்ந்த பெண்களில் ஒருவர் அல்லது மணமகன் மணமகளது கழுத்தில் அடையாளமாக இடப்படுகிறது. இஸ்லாத்தைப் பொருத்தவரை திருமணம் ஒரு ஒப்பந்தமாகும். அவ்வொப்பந்தத்தில் தாலிக்கு எந்த இடமுமில்லை" **(AHHM. இஸ்மாயில். பக் : 242)**

ஒரு பெண்ணுக்கு மஹராகப் பெறுமதியுள்ள விலை மதிக்கத்தக்க எப்பொருளையும் மஹராகக் கொடுக்கலாம். நகைகள், ஆடைகள், வீட்டுத் தளபாடங்கள் என்பவற்றைப் போல சுருங்கக் கூறின் விற்பனைக்குரிய பொருட்கள், குறிப்பிட்ட சில காலத்திற்குரிய காணிக் குத்தகைகள், வீட்டு வாடகைகள், கடையறைக் கூலிகள், வாகனத்தின் வருமானங்கள் யாவற்றையும் மஹராக வழங்கலாம் என்கின்றது இஸ்லாமிய சட்டம். இந்த வகையில் வழங்கப்படும் மஹர் பிரயோசனமாக இருக்க வேண்டும்.

"நபி (ஸல்) அவர்கள் தங்கள் மனைவியருக்கு 12.5 ஊகியா (500 திர்ஹம் அதாவது 6500 ரூபாய் வரை) மஹர் வழங்கியதாக ஆயிஸா (ரழி) அறிவிக்கிறார்கள்" **(முஸ்லிம், அபூதாவூத், அஹ்மத், நஸயி, இப்னு மாஜா)** "நபித்தோழர் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (ரழி) அவர்கள் தங்கத்தை பேரீச்சம் விதை அளவிற்கு தன் மனைவிக்கு மஹராகக் கொடுத்தார்கள்" **(புஹாரி)** "ஒரு இரும்பு மோதிரத்தையாவது மணப்பெண்ணுக்கு மஹராகக் கொடுத்து மணமுடியுங்கள். என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்" **(புஹாரி,முஸ்லிம்)** ஸாபித் இப்னு கைஸ் அவர்களின் மனைவி ஒரு தோட்டத்தை மஹராகப் பெற்றிருந்தாள்" **(புஹாரி, நஸஈ)** **"**ஒரு ஸஹாபிக்கு நபி (ஸல்) அவர்கள் மஹர் கொடுக்க வசதியில்லாதபோது குர்ஆனின் சில அத்தியாயங்களை மணப்பெண்ணுக்கு கற்றுக் கொடுப்பதை மஹராக நிர்ணயித்தார்கள்."**(முஸ்லிம்)** **"**நபி (ஸல்) அவர்கள் ஸபிய்யா எனும் பெண்ணை அடிமை விடுதலை செய்ததை மஹராக்கி மணந்தார்கள் என அனஸ் (ரழி) அறிவிக்கிறார்." "ஒரு பெண்ணுக்கு காலணிகளை வழங்கி திருமணம் செய்ய அனுமதித்துள்ளார்கள்" **(திர்மிதி, அஹ்மத், இப்னு மாஜா)** **"**உம்மு ஸுலைம் (ரழி) அவர்களை அபூதல்ஹா (ரழி) என்பவர் மணம் செய்ய விரும்பியபோது நீர் முஸ்லிமாகிவிடும் அதுவே எனக்கு மஹராகும் என்றார்கள்"**(நஸஈ)**

இங்கு மஹரானது பணமாகவோ பிரயோசனமிக்க பொருட்களாகவோ கல்வியாகவோ அமையலாம் என்பது விபரிக்கப்படுகிறது.

**வரைபடம்: 06 நன்கொடை வகை பற்றிய விபரம்**




மூலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு 2014


பெற்றோரது நன்கொடையை எடுத்து நோக்கும் போது நன்கொடை இடம் பெற்ற திருமணங்களில் நிலம் வழங்குதலே கூடுதலாக (100%) இடம் பெற்றுள்ளது. அதற்கு அடுத்த பட்சத்தில் வீடும் (95.06%) அதற்கடுத்து முறையே தங்கம் (86.42) , பணம் (14.81), கடை (6.17), வாகனம் (4. 94) என வழங்கப்படுகின்றது.

இதிலிருந்து மணமகனிடமிருந்து மஹராக பணமும் மணமகளிடமிருந்து நன்கொடையாக நிலம், வீடு, நகை என்பனவும் இங்கு வழக்கிலுள்ளது. பொதுவாக பெண்ணுக்கு அவளது பெற்றோர் மற்றும் ஆண் சகோதரர்களாலேயே வீடு அமைத்துக் கொடுக்கப்படுகின்றது. இதற்காக அவர்கள் வட்டிக் கடன், அரச கடன் என்பவற்றில் தள்ளப்பட்டு சிரமப்படுவதனையும் நேர்காணலினூடாகவும் அவதானத்தினூடாகவும் அறிய முடிந்தது.

**மஹரைப் தீர்மானித்தலும் பிரயோகித்தலும்**

ஆய்வுப் பிரதேசத்தை பொறுத்தவரை மஹர் தொகை பெண்ணின் விருப்பத்துக்கமைய தீர்மானிக்கப்படவில்லை என்பதும் தெளிவாகிறது. பற்றி வினவப்பட்டபோது, மஹர் தொகை பெண்ணால் கேட்கப்பட்டதா? என்ற வினாவுக்கு 26 வீதமானோர் ஆம் என்றும் 74 வீதமானோர் இல்லை என்றும் பதிலளித்துள்ளனர். இதனை பின்வரும் வரைபடம் காட்டுகிறது.

**வரைபடம் : 07 மஹர் பெண்ணின் விருப்பத்துக்கமைய தீரமானிக்கப்படல் பற்றிய விபரம்**




மூலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு 2014

“மஹர் பற்றியோ அதனைப் பெண்கள் கேட்டுப் பெறலாம் என்பது பற்றிய தெளிவோ பெண்களிடம் இல்லை. மஹர் குறித்து பெண்ணிடம் கேட்கப்படுவதுமில்லை. அவள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்கிறாள். மேலும் மணமகளின் தந்தையினூடாகவே அதனைப் பெற்றுக் கொள்கிறாள். மஹர் பற்றிய தெளிவும் அதன் மகத்துவமும் அறியாததனால் பெண்கள் தங்கள் உரிமையையே விட்டு விடுகின்றனர்” திருமணத்தின்போது பெண்தான் மஹரைக் கேட்க வேண்டும். அவளுக்கு மஹரை தனக்கேற்ற வகையில் கேட்டுப் பெற இஸ்லாம் அனுமதிக்கிறது. அல்லது கணவனால் குறிப்பிடப்படும் மஹர் அவளால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

“ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் ஒருவரிடம் இன்ன பெண்ணை உனக்கு மணமுடித்துத் தருகின்றேன். உனக்குச் சம்மதமா என்று கேட்டார்கள். சரி என்று பதிலளித்தார்கள். நபியவர்கள் அப் பெண்ணிடம் இன்ன ஆணை உனக்கு மணமுடித்துத் தருகின்றேன் உனக்குச் சம்மதமா என்று கேட்டார்கள். அவள் சரி எனச் சம்மதித்தாள். எனவே நபியவர்கள் அவளுக்கு எந்த மஹரையும் கொடுக்காமல் அப்பெண்ணை அவருக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள். அவர் ஹுதைபிய்யா உடன்படிக்கையில் கலந்து கொண்டார். எனவே கைபர் போரின் கனீமத் பொருட்களுள் ஒரு பங்கு அவருக்குக் கிடைத்தபோது அதனை அவர் மஹராக்கினார். **(அறிவிப்பவர்: உக்பா இப்னு ஆமிர் (ரழி), நூற்கள் : அபூதாவூத், இப்னு ஹிப்பான்)**

“ஒரு தடவை இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களிடம் சிலர் வந்து அவர்களுள் ஒருவர் மஹரைக் குறிப்பிடாமல் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். அந்தத் திருமணத்தை நிறைவு செய்ய முன் இறந்து விட்டார் என்பதைச் சுட்டிக் காட்டினார். அவளுடைய குடும்பத்திலுள்ள பெண்களுக்கு (தாய், சகோதரி) எவ்வளவு மஹர் கொடுக்கப்பட்டதோ அதை அவளுக்குக் கொடுக்குமாறு பணித்தார்” **(அறிவிப்பவர் : அல்கமா (ரழி), நூல் : அபூதாவூத், நஸஈ)**

ஒரு பெண்ணுக்கு திருமணத்தில் மஹர் குறிப் பிடப்படவில்லை என்றால் அல்லது தன்னை ஒத்த பெண்களுக்கு வழங்கப்பட்ட மஹர்களை ஒப்பிடும் போது மிகக் குறைவாக இருந்தால் ‘நியாயமான மஹர்’ எனும் அவளுடைய உரிமைக்கு நட்டம் ஏற்பட்டுவிடவில்லை எனினும் அவள் இது தொடர்பாக இஸ்லாமிய அதிகாரியிடம் முறையிடலாம். சித்த சுவாதீனமுள்ள ஒரு பெண் தனது வலியை நோக்கி மஹரின்றித் திருமணம் செய்து வைக்கக் கோரின் திருமணத்தை நடத்தி வைப்பது ஷரிஅத்தில் அங்கீகரிக்கப்பட்ட முறையாகும். இதன் போது கட்டாயமாக மணமகளது சம்மதம் பெறுவது *‘ஷர்த்து’* ஆகும். இச்சந்தர்ப்பத்தில் மணமகன் கணித்துக் கூறிய மஹர் தனக்குத தகுதியுடையதா என்பதை மணப்பெண் அறிந்து கொள்வாள். இதனையே

*'மஹறை பர்ளு'* செய்தல் எனப்படும். இதற்கு *'மஹர் மிஸ்ல்'* என்றும் சொல்லப்படும். விவாகரத்தின் போது அல்லது இறப்பின் போது இது கணிப்பிட்டு வழங்கப்படும். **(அப்துல் லதீப். 2009. பக் : 18)**

இதன்போது மணப் பெண்ணுக்கும் அவளது உறவுப் பெண்களுக்கும் இடையிலான பின்வரும் சிறப்புக்கள் கவனத்திற் கொள்ளப்படும். அவையாவன, சமூகத்தில் அவளுடைய குடும்ப நிலை, அவளுடைய தனிப்பட்ட தகைமை, கணவனின் சமூக அந்தஸ்து, அவளுடைய அறிவு, விவேகம், அழகு, செல்வம், கன்னித் தன்மை, கன்னித் தன்மை இழந்திருத்தல், அவளுடைய குடும்பத்தில் வழமையாக வழங்கப்பட்டு வரும் மஹர் தொகை என்பவையாகும். **(Ankita Sharma, 2013.02.07)**

பெண்களின் மஹர் அவர்களின் கணவனாலேயே பிரயோகிக்கப்பட்டது என 39 வீதமானோரும் தமது விருப்பத்துடன் தாங்களே தமது தேவைக்காகவும் குடும்பத்துக்காகவும் பயன்படுத்தினோம் என்று 55 வீதமானோரும் தகவல் வழங்கியுள்ளனர். "சில திருமணங்களில் வழங்கப்படும் மஹர் கணவனால் விவாகரத்து கோரப்பட்டாலும் அதை பரித்துக் கொள்ளும் நிலையும் மனைவியின் விருப்பமின்றி கணவன் எடுத்துக் கொள்ளும் நிலையும் காணப்படுகிறது." **(நேர்காணல் : 05)**

*'மஹர்'* என்பது மனைவியின் முழுமையான உரிமையாகும். அவளுடைய அனுமதியின்றி அதை யாரும் எடுத்துக் கொள்ள உரிமையில்லை. அவளுடைய பெற்றோராக இருப்பினும் அவர்கள் அதை எடுத்துக் கொள்ள உரிமையில்லை. தன்னைக் கணவனிடம் ஒப்படைப்பதற்காகப் பெற்றுக் கொள்ளும் தொகை என்பதால் அல்லாஹ் அவளுக்கு அதற்கான முழு உரிமையையும் கொடுத்திருக்கின்றான். மேலும் மனைவி மீது எந்தத் தவறும் இல்லாத நிலையில் கணவன் அவளைத் *'தலாக்'* விட்டால் அச்சமயத்தில் கூட தன் மஹறை அப்பெண் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். இதனை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

***"ஒரு மனைவியை நீக்கிவிட்டு அவளுக்குப் பதிலாக மற்றொரு பெண்ணை மணந்து கொள்ள நீங்கள் கருதினால் (நீக்கிவிட விரும்பும்) அந்த முந்திய மனைவிக்கு நீங்கள் ஒரு பொற் குவியலைக் கொடுத்திருந்த போதிலும் அதிலிருந்து எதனையும் நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள். அபாண்டமாகவும், பகிரங்கமாகவும் ஒரு குற்றத்தைச் சுமத்தி நீங்கள் அதனை பறித்துக் கொள்ளலாமா? அதனை நீங்கள் எவ்வாறு எடுத்துக் கொள்ளலாம்? உங்களிடமிருந்து அவள் உறுதியான வாக்குறுதியை (பலருமறிய) பெற்று உங்களில் ஒருவர் மற்றொருவருடன் சேர்ந்து கலந்து விட்டீர்களே!"*** **(அல்குர்ஆன்: 04: 20,21)**

இந்தரீதியில் மஹர் அனைத்துமே மனைவிக்குரியதாகும். அவள் விரும்பினால் அவளுடனேயே வைத்துக் கொள்ளலாம். அல்லது அதில் சிறிதைத் தன் பெற்றோருக்கோ, மற்றோருக்கோ, தன் கணவனுக்கோ கொடுக்கலாம். வற்புறுத்தி பெறுவதற்கு எவருக்கும் உரிமை இல்லை. மேலும் ஒரு கணவன் தன் மனைவிக்கு மஹர் கொடுக்காதபோது அவள் தன்னை அவனிடம் ஒப்படைக்காதிருக்க அவளுக்கு ஷரிஅத்தில் இடமளிக்கப்பட்டு அதனை அவளது உரிமை என்றும் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே மஹர் கொடுப்பது *'வாஜிப்'* என்பதனால் அதனைக் கொடுக்காது பாராமுகமாக இருப்பது கண்டிக்கத் தக்கதாகும்.

ஷரிஅத்தில் கூறப்படும் விவாக நடைமுறையை ஓர் ஆண் முழுமையாகக் கடைப்பிடிக்கும் போது கணவனின் வருமானத்தைக் கருத்திற்கொண்டு ஒரு மனைவி முழு மஹறையோ அல்லது அதில் ஒரு பகுதியை அவனுக்காக இழக்கலாம் என்பது ஷரிஅத்தின் வழிகாட்டலாகும். ஒரு கணவன் தனது மனைவியுடன் உறவு கொண்டால் மஹர் கட்டாயம் ஆகிவிடும். இதேபோல் அவர்களில் எவர் மரணித்தாலும் மஹர் வாஜிபாகிவிடும். அதனை மரணித்தவரின் சொத்திலிருந்து அவனது வாரிசுகள் நிறைவேற்றுவது கடமையாகும். மனைவி மரணித்தால் அவளது வாரிசுகள் அதனைப் பெற்றுக்கொள்வர்.

ஆய்வுப் பிரதேச மஹர் நடைமுறையை நோக்கும்போது, மஹர் இஸ்லாமியத் திருமணத்தில் பிரிக்க முடியாத அம்சம் என்ற வகையில் ஆய்வுப் பிரதேசத்திலும் அது ஏதோவொரு அமைப்பில் இடம்பெறுகின்றது எனினும் சில நடைமுறைகளில் இஸ்லாத்தின் கொள்கையை பின்பற்றுவதில் புறக்கணிப்பு காணப்படுகின்றது என்பதை கண்டறிய முடிகிறது. இல்லற வாழ்வில் அதிக இழப்புக்கு ஆளாவது பெண்கள் தான் தங்களின் அழகையும் இளமையையும் இழந்த பின் அவர்கள் விவாகரத்து செய்யப்படக்கூடும் அந்த நிலையை எல்லாம் எண்ணிப் பார்த்து மஹர் தொகையை தீர்மானிக்கும் உரிமையைப் பெண்களுக்கு இஸ்லாம் வழங்குகின்றது. இன்று ஏனைய மதங்களிலுள்ள ஜீவனாம்சத்தை விட இஸ்லாம் விதிக்கும் மஹர் பாதுகாப்பும் உத்தரவாதமானது. இஸ்லாமிய கோட்பாட்டின் படி மஹர் என்பது மனைவியின் முழு உரிமையாக காணப்படுகின்றது. மஹர் கொடுக்க வேண்டுமே தவிர அவர்களிடமிருந்து எதனையும் எதிர் பார்க்கலாகாது. மேலும் அது எந்த வகையிலும் பிரயோசனம் மிக்கதாக அமைவதோடு மஹர் விடயத்தில் இரு சாராரும் பாதிக்கப்படாது அமைவதும் அவசியமாகும்.

## முடிவுரை

கல்முனைப் பிரதேச திருமணங்களின்போது முஸ்லிம்களது திருமணத்தின் மஹர், நன்கொடை நடைமுறையில் காணப்படும் சிக்கல்களையும்,

அவற்றிலிருந்து தெளிவைப் பெற்றுக் கொள்வதற்கான இஸ்லாமியக் கோட்பாடுகளை இலக்கியங்கள், ஊரின் முக்கிய பிரமுகர்களுடனான கலந்துரையாடல், நேர்காணல் என்பவற்றினூடாக முன்வைப்பதாகவும் அமைந்துள்ளது. இவ்விடயங்களை இப்பிரதேச இளைஞர்கள், யுவதிகள் உட்பட பிரதேச முஸ்லிம்கள், கற்றறிந்தோர் தம் செயற்பாடுகளில் உள்வாங்குவார்களாயின் எதிர்காலத்தில் தூய இஸ்லாமிய திருமணங்கள் இடம்பெறவும் இஸ்லாமிய நெறிமுறைகளை கடைபிடித்தொழுகும் இளைய சந்ததியினர்களை வளர்த்தெடுக்கவும் முடியும்.


**உசாத்துணைகள்**

**நேர்காணல்**

1) அப்துல் ஸமட். (2014.09.24). அத்தர் மஹால். கல்முனை.
2) அமீர் எம். வை. (2014.09.24). அல் அஸ்கர் வீதி. கல்முனை.
3) நதீர் இஸட். எம். (2014.10.02). மாரியார் வீதி. கல்முனை.
4) நௌபர் தம்பிராசா டி. ஆர். (2014.10.04). செயிலான் வீதி. கல்முனை.
5) மன்சூர் யூ. எல். எம். (2014.10.03). அல்பஹ்ரியா மகா வித்தியாலயம். கல்முனை.
6) முஹம்மது லெவ்வை எச். எம். எஸ். (2014.10.04) சாஹிபு வீதி. கல்முனை.
7) ஹனீபா யூ. எம். (2014.09.27). அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை. கல்முனை.
8) ஜலீல் பீ. எம். (2014.09.28). மாதவன் வீதி. கல்முனை.
9) பாயிஸா. (2014.09.28). செயிலான் வீதி. கல்முனை.
10) ஜஹானுல் பேகம். (2014.09.28). செயிலான் வீதி. கல்முனை.

**நூல்கள்**

1) Asiff Hussain, (2007). ***"Sarandib – An Ethnological Study of the Muslims of Sri Lanka".*** Dehiwala : AJ Prints.
2) Asiff Hussain , Jameel, S.H.M., (2011). "***The Muslim Heritage Of Eastern Sri Lanka".*** Colombu : Muslim Women's Research & Action Forum.
3) Mohamed Shakir Ali, in English Mohamed Salim. (2010). ***"Islamic Consept of Nikah".*** Mumbai : Makthabe Taiba.
4) Moulana Moudoodi, in English Fazil Ahmed. (1983). ***"The Laws of Marriage & Divorce in Islam".***Kuwaith : Islamic Book Publishers.
5) அப்துல் லதீப், எம். எம். ஏ., (2009), "***விவாகம்***", அக்கரைப்பற்று: ஜின்னா பப்ளிகேஷன்.
6) சாஹுல் ஹமீத், எம். வை., (1994), "***மறை கூறும் மணக்கோலம்***", திருச்சி: ஹமீதிய்யா பதிப்பகம்.
7) முஹம்மத் இப்னு முஸ்தபா, தமிழில் அப்துல் ஹாதி, (2010), "***இஸ்லாமிய இல்லறம்***", சென்னை: சாஜிதா புக் சென்றர்.

**இணையத்தளங்கள்**

1) Ankita Sharma. (2012.03.01). ***"What is Mahar or Dower in muslim law?"*** [online] available: http://www.preservearticles.com/2012030124287/what-is-a-mahar-or-dower-in-muslim-law.html [accessed] : [2013.02.08].

2) Deacon Economos, T. S. (2004). **"Marriage"** [online]: available: http://www.deaconministry.com/marriage.htm [accessed] :[2013.02.08].

3) அப்ஸரா. (2012.7.13). ***"திருமணத்தில் மட்டும் நபி வழியை மறந்தது ஏன்?"*** [online] available: http://www.islamiyapenmani.com/2012/07/blog-post_29.html [accessed] :[2013.02.07].

4) பௌஸ். (2012.12.28). ***"இஸ்லாமியத்திருமணம் - நிகாஹ்".*** [online] available: http://www.dawahworld.com/?tag=marriage-in-islam [accessed] :[2013.02.03].

5) ஷம்ஸாத், V. (2012.10.17) ***"எடுப்பதும் கொடுப்பதும்".*** [online] available: http://www.islamkalvi.com/general/mahar.htm [accessed] :[2013.02.07].